IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

SC.No. 111/2024

dated: 02.12.2025

P.W.3

Name கருப்பசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இரவு எங்கள் ஸ்டாண்டில் உள்ள வாகனங்களை 11 மணிக்கு மேல் இயக்கக்கூடாது என்று நாங்கள் விதிமுறை வைத்துள்ளோம் என்று ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 15.08.2018 ம் தேதி இரவு 8 மணி முதல் 8.30 க்குள்ளாக தெற்கேயுள்ள உள்ள எங்கள் ஆட்டோ ஸ்டாண்டின் குடிசை பகுதியில் வைத்து கேட்டார் என்று நேரம் குறித்து ஆய்வாளர் விசாரணையில் 8 மணி முதல் 8.30 க்குள்ளாக என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சத்தம் கேட்டதும் நாங்கள் செட்டிற்குள் எட்டிப்பார்த்தபோது இராமசுப்பு அய்யோ விட்டுடா விட்டுடா என்று ஆஜர் எதிரியைப் பார்த்து சொன்னார் இராமசுப்பு எங்களை பார்த்து ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போங்கள் என்று கெஞ்சினார் என்ற விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நாங்கள் ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து புறப்படும்போதே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டோம். சுமார் 15

நிமிடத்திற்குள் போலீசார் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சிவகிரி மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள் அப்போது போலீசார் எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள் அதில் நான் கையெழுத்துப்போட்டேனா என்றால் கையெழுத்துப் போட்டேன். அதன்பின்னர் இரண்டு நாட்கள் கழித்து எனது ஆட்டோ ஸ்டாண்டில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் இன்றும் கடந்தமுறையும் சாட்சியமளிக்கும் முன்பாக போலீசார் சிவகிரி காவல் நிலையத்திற்கு வரவழைத்து எவ்வாறு சாட்சியமளிக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல் முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் உடன் பிறந்த சகோதரர் காளிமுத்து என்பவர் இராமசுப்பு உறவினர் காளிராஜ் என்பவரால் கொலை செய்யப்பட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ. தொலைவு இருக்கும். சிவகிரி கஸ்பாவில் எந்தவித அசம்பாவித சம்பவம் ஏற்பட்டாலும் நான் கேள்விப்படுவேன் என்றால் சரிதான். எதிரியின் சகோதரர் காளிமுத்து கொலை செய்யப்பட்டு இறந்துபோனார் என்றால் சரிதான். அவர் இராமசுப்வுவின் உறவினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இராமசுப்பின் உறவினர் காளிராஜ் என்பவரால் எதிரியின் உடன் பிறந்த சகோதரர் கொலை செய்ததால் இறந்து போன

இராமசுப்பு குடும்பத்தினர் எதிரி மீது விரோதம் கொண்டிருந்தனர் என்றால் சரியல்ல. சிவகிரியில் பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் என்று இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளது என்றால் சரிதான். பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் சுமார் 3/4 கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சிவகிரி பேருந்து நிறுத்தத்திற்கு வெளியே ஒரு ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். புதிய பேருந்து நிலையத்திற்கு கிராம புறத்திற்கு செல்லக்கூடிய டவுண் பஸ்கள் மட்டும் இரவு 9.30 மணிவரை வந்து செல்லும் என்றால் சரிதான். சிவகிரி புதிய பேருந்து நிறுத்தத்தில் உள்ள நான் சார்ந்திருக்கக்கூடிய ஆட்டோ ஓட்டுநர்களும், வெளியே இருக்கும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். வெளியூரைச் சேர்ந்த விஸ்வாநாதப்பேரி, தேவிபட்டினம், இராயகிரி, தெற்குசத்திரம் ஊரைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள் பேருந்து நிலையத்திற்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது என்று இராமசுப்பு கண்டிப்பார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு அவ்வாறு தேவிபட்டினத்தைச் சேர்ந்த ஓட்டுநர் கருப்பையா என்பவரிடம் இறந்துபோன இராமசுப்பு அடிக்கடி தகராறு செய்வார் என்றால் சரிதான். எனவே தேவிபட்டினத்தைச் சேர்ந்த கருப்பையா மற்றும் அவரது உறவினர்கள் தேவிபட்டினத்தைச் சேர்ந்தவர்கள் இராமசுப்வுவின் மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே விரோதம் ஏதுமில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் கருப்பையா அவரைச்

சார்ந்தவர்கள் இராமசுப்பின் மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. சிவகிரி பேரூராட்சி தலைவர் தேர்தலில் சேது ராஜா என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். அவருக்கு எதிராக பாபு என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். அவர் வெற்றி பெற்று தலைவரானார் என்றால் சரிதான். சேதுராஜா எதிரியின் மாமா உறவு முறை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சேதுராஜா எதிரியின் உறவினர் என்றும் வெற்றி பெற்ற பாபுவுக்கு எதிராக எதிரி தேர்தல் வேலை செய்து வந்ததால் பாபு என்பவருக்கு எதிரி மீது விரோதம் உண்டு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இராமசுப்புவின் உறவினர் முத்துக்குமார் காவல் துறையில் பணிபுரிபவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராமசுப்புவை அவர் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே பழக்கம். இராமசுப்புவிற்கு முதலில் ஒரு திருமணம் நடைபெற்றது என்றால் அது எனக்கு தெரியாது. அவரது இரண்டாவது மனைவி யார் என்றும் எனக்கு தெரியாது. புகார் கொடுத்தவர் யார் என்று தெரியுமா என்றால் இராமசுப்புவின் மனைவி புகார் கொடுத்தார். சாட்சி தானாக மனைவி பெயர் சாந்தி என்று கூறுகிறார். சாந்தி என்பவரை நான் பார்த்துள்ளேன் அவரிடம் பேசியதில்லை. புதிய பேருந்து நிறுத்தத்தின் நுழைவு வாயிலுக்கு மேல்புறம் காந்தி கலையரங்கம் உள்ளது. அங்குதான் அரசியல் கட்சியினர் பொதுக்கூட்டம் நடத்துவார்கள் என்றால் சரிதான். இறந்துபோன இராமசுப்பு என்பவர்

பலபெண்களிடம் பழக்கம் கொண்டவர் என்றால் அது எனக்கு தெரியாது. இராமசுப்புவிற்கு வேறு பல பெண்களுடனும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு இருந்து வந்தது என்றும் அதனால் பலருக்கும் இராமசுப்புவின் மீது விரோதம் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களது ஆட்டோ ஸ்டாண்ட் செட் தென்னஓலையால் நிரப்பப்பட்ட 7 அடி நீளம், 5 அடி அகலம் கொண்ட செட் ஆகும். அந்த செட்டிற்குள் தண்ணீர்கேன், டம்ளர், மண்பாணை ஆகிய பொருட்கள் இருந்தது. போலீசார் என்னை விசாரிக்க வந்தபோது அந்த செட்டிற்குள் இருந்த விவரங்களை குறித்துக் கொண்டார்கள். அந்த செட்டிலிருந்து 5 அடி தொலைவிலேயே பைக் ஸ்டாண்ட், சைக்கிள் ஸ்டாண்ட் உள்ளது. கருத்தபாண்டி என்பவர் அந்த சைக்கிள் ஸ்டாண்டிற்கு கலெக்ஷ்ன் ஏஜெண்டாக இருந்தார். இரவு நேரத்தில் எப்போதும் அந்த சைக்கிள் ஸ்டாண்டில் ஆட்கள் இருப்பார்கள். சைக்கிள் ஸ்டாண்டிற்கு 10 அடி தொலைவில் கழிப்பிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கழிப்பிடத்தில் கலெக்ஷன் ஏஜெண்ட் இரவு 10 மணி வரை இருந்தார். அதற்கு அருகில் உள்ள வேன் ஸ்டாண்டில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் 25 பேர் அந்த இடத்தில் இருந்தார்கள். நான் சத்தம் கேட்டு இராமசுப்புவை பார்த்தபோது அங்கு சுமார் 30 பேர் கூடிவிட்டார்கள். காயம்பட்ட இராமசுப்பு நாங்கள் ஆட்டோவில் எடுத்துச் செல்லும் முன்பு வரை எங்களிடம் பேசினார். ரமேசின் ஆட்டோ பழுதடைந்து செட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். நாங்கள் ஆட்டோவில் அவரை ஏற்றும்வரை

அவர் ஆட்டோவில் நடந்து வந்துதான் ஏறினார். என் சட்டையிலோ, ரமேஷ் சட்டையிலோ இரத்தக்கறை படவில்லை. அழைத்துச் சென்றதாக கூறப்படும் நபர் எவர் உடையிலும் இரத்தக்கறை படவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் இராமசுப்பு தனக்கு என்ன ஆயுதத்தால் காயம் ஏற்பட்டது என்று சொன்னாரா என்றால் சொன்னார். அந்த ஆட்டோவில் நான்கு பேர் போனோம், அந்த ஆட்டோவில் மூன்றுபேருக்கு மேல் பயணிக்க முடியாது என்றால் சரியல்ல. பாலு எங்களுடன் வந்தார். அவர் பின்னால் உட்கார்ந்திருந்தார். இராமசுப்பு வண்டியை எடுத்துக் கொண்டு மருத்துவமனை செல்லவில்லை. அந்த ஆட்டோவை எப்போது யார் எடுத்துச் சென்றார்கள் என்று தெரியாது. நான் இரண்டு நாட்கள் கழித்து பார்க்கும்போது ஆட்டோ அங்கு இல்லை. நான் கூறும் செட்டிற்குள் விளக்கு வெளிச்சம் ஏதும் கிடையாது. ஆட்டோவில் இரத்தகறை படியவில்லை. நாங்கள் 5 நிமிடத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். அங்கு மருத்துவர் 1/2 மணி நேரம் சிகிச்சையளித்திருப்பார் என்றால் சரிதான். சிவகிரி போலீசார் மருத்துவமனைக்கு சென்ற 1/4 மணி நேரம் கழித்து வந்தார்கள். போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு நேரில் தெரியாது சங்க உறுப்பினர்கள் தகவல் சொன்னதாக கேள்விப்பட்டேன். என்னுடன் மருத்துவமனைக்கு வந்த ரமேஷ், பாலசுப்பிரமணி இருவரும் சொல்லவில்லை. மருத்துவமனையிலிருந்து 9 மணிக்கு தென்காசிக்கு புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். சம்பவம் நடந்ததாக கூறும் நேரத்தில் சத்தம் கேட்டு

நாங்கள் இராமசுப்புவை பார்க்கும்போது கூடியிருந்த 30 பேர் இருக்கும்போதே சாந்தி வந்துவிட்டார். நான் சத்தம்கேட்ட பின்னர்தான் எட்டிப்பார்த்தேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது. அதன் பின்னர்தான் சாந்தி வந்தார். 2018ம் ஆண்டு சிவகிரி அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் சேவை இல்லையென்றால் சரிதான். வாசுதேவநல்லூரிலிருந்துதான் ஆம்புலன்ஸ் வரவேண்டும். மருத்துவமனையிலிருந்து தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் வருவதாக இருந்தால் 1/2 மணிநேரத்திலிருந்து 3/4 மணி நேரம் ஆகலாம் என்றால் சரிதான். சிவகிரியிலிருந்து தென்காசி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல இரண்டு மணி நேரம் ஆகலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் எதிரி சிவகிரியிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் விதிமுறைக்கு மாறாக இரவு 11 மணிக்கு மேல் எதிரி ஆட்டோ ஓட்டினார் என்றும் அதை இராமசுப்பு கண்டித்தார் என்று கூறுவது உண்மையல்ல என்றும், 15.08.2018 ஆட்டோ ஸ்டாண்டில் செட் அமைந்துள்ள பகுதியில் எதிரிக்கும், இராமசுப்புவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொல்வதும் நானும், ரமேஷ், செந்தில்குமார் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்ததாக கூறுவதும் எதிரி கையிலிருந்த கத்தியைக் கொண்டு இராமசுப்பின் இடது கழுத்து, கண்ணம், கையில் குத்தினார் என்று கூறுவதும் பின்னர் நானும், பாலசுப்பிரமணி, ரமேஷ் ஆகியோர் இராமசுப்புவை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கூறுவது பொய் என்றால்

சரியல்ல. 15.08.2017 தேதி இரவு 7 முதல் 7.30 மணி வரை சிவகிரி பேருந்து நிலையத்திற்கு வெளியே அரசியல் கட்சியினர் மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்த ஊர்வலமாக வரும்வழியில் இராமசுப்பு தகராறு செய்து அந்த தகராறில் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இராமசுப்புவிற்கு தெரிந்த விரோதிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டு பின்னர் தப்பிக்கவேண்டி சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் செட்டிற்குள் வந்து விழுந்துள்ளார் என்றும் அவர் காயப்பட்ட விவரம் கேள்விப்பட்டு நானும் மற்ற உறுப்பினர்களும் சிவகிரி பழைய பேருந்து நிலையத்திலிருந்து சிவகிரி புதிய பேருந்து நிலையம் செட்டிற்குள் சென்று பார்த்தபோது பேருந்து நிலையத்தில் இருந்தவர்களும் சம்பவ கேள்விப்பட்டு வந்த ஆட்டோ ஓட்டுநர்களும் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டு நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நேரத்தில் சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் நான் இல்லவே இல்லை என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரி இராமசுப்புவை கத்தியால் தாக்கியதாக சொல்வதும், அதன்பின்னர் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் நானும், ரமேசும், பாலசுப்பிரமணியனும், சாந்தியும் ஆகியோர்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு சென்றதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. இராமசுப்புவை தாக்கிய உண்மையான எதிரி யார் என்று

தெரியாததால் யாரோ செய்த கொலைக்கு அ.சா.1 பொன்மாரியைத்தான் எதிரியை சேர்க்க வேண்டுமென்று அ.சா.1 குடும்பத்தினர் வற்புறுத்தியதால் அவர்கள் குடும்பத்தினருக்கு தெரிந்த போலீசார் முத்துக்குமார் மற்றும் தலைவர் பாபு அவர்களின் தூண்டுதலின்பேரில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலீசாரால் பொய்யாக தயாரிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்திற்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் இராமசுப்புவிற்கு எந்த காயமும், இறப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் எதிரி ஊரிலேயே இல்லை என்றும் அவர் ஆட்டோ ஓட்டவேயில்லை என்றும் எங்களது சங்கத்தில் உறுப்பினராகவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 எழுதிக் கொடுத்த புகாரிலும் இராமசுப்புவிற்கு யாரோ இனம் தெரியாத நபரால் ஏற்பட்ட காயம் என்று குறிப்பிட்டு புகார் கொடுத்திருந்தேன் என்றும் அந்த புகார் வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் அதை மறைக்கப்பட்டு அ.சா.ஆ.1 புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதும் போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசாரை பகைத்துக் கொண்டால் அங்கு ஆட்டோ ஓட்ட முடியாது என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்தது போல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் அரசு தரப்பு

வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காவிட்டால் சிவகிரி வட்டாரத்தில் ஆட்டோ ஓட்ட முடியாது என்று போலீசார் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.12.02 17:56:20 +0530